பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
01 07 2026 WEDNESDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுகாதார சேவையில் மருத்துவர்களின் பங்கு போற்றத்தக்கது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பட்டய கணக்காளர்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 183 ரூபாய் 50 காசு குறைக்கப்பட்டுள்ளது.

4. பாலஸ்தீன மக்களுக்கு 175 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

5. அமெரிக்க Smash டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மானவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

தேசிய மருத்துவர்கள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர், முதலமைச்சர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சுகாதார சேவையில் மருத்துவர்களின் பங்கு போற்றத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

கோவிட் தொற்று காலத்தின் போது, மருத்துவர்களின் சேவையை நினைவுகூர்ந்துள்ள அவர், ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டுத் திட்டத்தின் மூலம், மருத்துவ சேவை விரிவாக்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்காக பாடுபட்டு வரும் மருத்துவர்களின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பை பாராட்டுவதாக தெரிவித்துள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் சுகாதாரத்துறையை மேம்படுத்த அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள பிரதமர், மருத்துவ படிப்புகளுக்கான எண்ணிக்கையும் அதகிரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதன் மூலம், அதிக அளவில் இளைஞர்கள் மருத்துவர்களாக உருவெடுக்க வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நோய் தடுப்பு மருத்துவம், நவீன மருத்துவ ஆராய்ச்சி, அனைவருக்கும் சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் மருத்துவர்களின் பங்கு முக்கியமானது என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், மக்களின் ஆரோக்கியத்திற்காக மருத்துவர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருவதாக தெரிவித்துள்ளார்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், சுகாதாரத் துறையில் மருத்துவர்கள் மிகவும் முக்கியப் பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் மருத்துவர்கள் அயராது பாடுபட்டு வருவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், மனித உயிர்களை காப்பதற்காக அயராது பணியாற்றும் அனைத்து மருத்துவர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவர்களின் தன்னலமற்ற சேவை, அர்ப்பணிப்பு மற்றும் மனிதநேயம் போற்றத்தக்கது என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மருத்துவர்கள், நோய்க்கான சிகிச்சை அளிப்பவர்களாக மட்டுமின்றி, சுகாதாரமான வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் திகழ்வதாக சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர் டாக்டர் தீபா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - டாக்டர் தீபா 33 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தேசிய பட்டய கணக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பட்டய கணக்காளர்களின் பங்களிப்பு முக்கியமானது என்று தெரிவித்துள்ளார்.

இவர்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் திறமையின் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பட்டய கணக்காளர்களின் பங்கு இன்றியமையாதது என்று தெரிவித்துள்ளார்.

1949ஆம் ஆண்டு இந்திய பட்டய கணக்காளர் பயிற்சி நிறுவனம் தொடங்கியதை குறிக்கும் வகையில், ஆண்டுதோறும் இந்நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

>>>>><<<<<

நாடுமுழுவதும் இன்றுமுதல் அமலுக்கு வந்துள்ள, வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம், வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை இது மேம்படுத்தும் என்று கூறியுள்ளார்.

இந்த சட்டத்தின் மூலம். ஊரகப் பகுதி மக்களுக்கு 125 நாட்கள் வேலை உறுதி செய்யப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தை செயல்படுத்த நடப்பு நிதியாண்டில் 95 ஆயிரத்து 692 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ராணுவம் நவீனமயமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ராணுவ தலைமைத் தளபதி ஜென்ரல் Dhiraj Seth வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் புதிய ராணுவ தலைமைத் தளபதியாக இன்று பதவியேற்ற பின், புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொழில்நுட்ப அடிப்படையில் இந்திய ராணுவம் மேம்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

எல்லைப்பகுதியில் ராணுவ வீரர்கள் பாதுகாப்பு பணியில் சிறப்பாக ஈடுபட்டு வருவதாக அவர் கூறினார்.

எத்தகைய சவாலையும் எதிர்கொள்ள ராணுவம் தயாராக உள்ளதாகவும் ஜென்ரல் Dhiraj Seth தெரிவித்தார்.

>>>>><<<<<

டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் மூலம், அரசு நிர்வாகம் சீரமைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் 11 ஆண்டுகள் சாதனை குறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இதன்மூலம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

டிஜிட்டல் பணப்பரிமாற்றம் மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக பணம் செலுத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் மூலம், கிராமங்களில் மட்டுமின்றி இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலை நகரங்களும் வளர்ச்சியடைந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இளம் தொழில் முனைவோர் மற்றும் புத்தொழில் தொடங்குவோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கல்வி, சுகாதாரம். வேளாண்மை, வணிகம், பொதுச்சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகள் டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் மூலம் வளர்ச்சியடைந்தள்ளதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 183 ரூபாய் 50 காசு குறைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய எண்ணெய்க் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த விலை குறைப்பு இன்று முதல் அமலுக்கு வருவதாக தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, தில்லியில் 19 கிலோ வணிக சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 2 ஆயிரத்து 930 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

>>>>><<<<<

*தமிழகத்தில் பொறியியல் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான தரவரிசைப் பட்டியலை மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் இன்று வெளியிட்டார்.*

*சென்னையில் தரவரிசை பட்டியலை வெளியிட்டு செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*(சவுண்ட் பைட் விஸ்வநாதன் 44 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*ராஜஸ்தான் மாநிலம், Dausa மாவட்டத்தில் இன்று பேருந்து - டிரக்குடன் மோதி தீப்பற்றி எரிந்ததில் 7 பேர் உயிரிழந்தனர். 12-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.*

*தில்லி - மும்பை விரைவுச்சாலையில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*காயமடைந்தவர்கள் Dausa மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*>>>>><<<<<*

*பாலஸ்தீன மக்களுக்கு 175 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.*

*இதுதொடர்பாக ஐ.நா-வின் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய ஐ.நாவிற்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு. P. Harish, சுதந்திர பாலஸ்தீனம் அமைக்கப்பட்டால் அப்பகுதியில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்று கூறினார்.*

*கடந்த 3 ஆண்டுகளில் இந்தியா கா□ ா பகுதியில் 150 டன் நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளதையும் திரு. P. Harish சுட்டிக்காட்டினார்.*

*>>>>><<<<<*

*அமெரிக்க Smash டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மானவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 8-11, 11-8 11-8, 11-7 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Sora Matsushima - Shunsuke Togami இணையை வென்றது.*

*இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் Diya Chitale - Yashaswini Ghorpade இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>><<<<<*

*உலக கோப்பை கால்பந்து போட்டியில் மெக்ஸிகோ 2-0 என்ற கோல்கணக்கில் ஈக்வெடாரை வென்று, காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.*

*முன்னதாக, நார்வே, பிரான்ஸ் அணிகளும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.*

*இன்றிரவு மணி 9.30-க்கு நடைபெறும் நாக்அவுட் ஆட்டத்தில் இங்கிலாந்து காங்கோவை எதிர்கொள்கிறது.*

*>>>>><<<<<*

*அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dakhsineswar Suresh காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 7-6, 6-4 என்ற செட்கணக்கில் கனடாவின் Liam Drasl-ஐ வென்றார்.

>>>>><<<<<

புதுச்சேரியில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 120 ரன் வித்தியாசத்தில் இலங்கையை வென்றது.

**>>>>>END<<<<<**